முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 23/2021

இன்று 2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 09 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிவராமலிங்கம் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : நடராஜன் | கிராமம் | : வேலம்பாளையம் |
| வயது | : 51 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 09.12.2024 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னியலையாகி கூடுதல் நிரூபண வாக்குமூலத்தின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். ஏற்கனவே எனது தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

கடந்த 12.11.2000 ம் தேதியிட்ட புகார் மனு ரசீது **வா.சா.ஆ.8** ஆகும். கடந்த 12.11.2000 ம் தேதியிட்ட புகார் மனு ஏற்பு சான்றிதழ் **வா.சா.ஆ.9** ஆகும். கடந்த 15.11.2000 ம் தேதியிட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய மனுவின் நகல் **வா.சா.ஆ.10** ஆகும். கடந்த 05.02.2001 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.11** ஆகும். கடந்த 14.08.2002 ம் தேதியிட்ட முருகப்ப கவுண்டரின் இறப்புச் சான்றிதழ் நகல் **வா.சா.ஆ.12** ஆகும். கடந்த

26.11.2004 ம் தேதியிட்ட வாரிசு சான்றிதழ் **வா.சா.ஆ.13** ஆகும்.

மேலே கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து தாவாவை அனுமதித்து உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) சொத்துக்கள் அனைத்தும் முருகப்ப கவுண்டருக்கு பாத்தியம் என்றால் சரிதான். சொத்துக்கள் முருகப்ப கவுண்டரால் தனித்து சம்பாதிக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் இல்லை. பாதி சொத்துக்கள் பரம்பரை சொத்துக்கள் ஆகும். முருகப்ப கவுண்டரின் தகப்பனார் பெயர் பழனிக் கவுண்டர் ஆகும். முருகப்ப கவுண்டருக்கு 4 மகள்கள், 1 மகன் ஆவார். வள்ளியம்மாள், ஆச்சியம்மாள், நடராஜன், மயங்காத்தாள், மயிலாத்தாள் ஆகியோர் முருகப்ப கவுண்டரின் வாரிசுகள் ஆவர். ஆச்சியம்மாள் மட்டும் இருக்கிறார். மற்றவர்கள் இறந்து விட்டார்கள்.

2) இறந்து போன நபர்களின் வாரிசுகள் அனைவரையும் வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். உரிய தரப்பினர்களை கட்சி சேர்க்காத காரணத்தால், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 24.05.2001 ம் தேதி என் தாத்தா உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அது தான் அவரது கடைசி உயில் என்றால் சரிதான். உயில் ஷரத்துக்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியும்.

3) உயிலில் மொத்தமுள்ள 3.32 ஏக்கரில் 1 ஏக்கர் நீங்கலாக மீதமுள்ள 2.32 ஏக்கருக்கு மட்டும் உயில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீதமுள்ள 1 ஏக்கர் சொத்து 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. முருகப்ப கவுண்டர் 1 ம் பிரதிவாதி மீது புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். 1 ஏக்கர் கிரயம் கொடுத்தது தவறானது என்று புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அது தொடர்பாக அ.வ.எண்.03/2001 வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

4) அ.வ.எண்.03/2001 வழக்கு தள்ளுபடியாகி விட்டது என்றால் சமரசமாகி விட்டது என சாட்சி பதில் அளிக்கிறார். அ.வ.எண்.03/2001 தொடர்பான ஆவணங்கள் நான் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. தாவாச் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். என் பெயரிலான உயில் ஆவணப்படி எனக்கு பாத்தியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான்.

5) உயில் ஆவணத்தை ரத்து செய்ய முருகப்ப கவுண்டருக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். ஆனால் சிவராமகிருஷ்ணன் என்ற பெயரில் உயிலை ரத்து செய்திருக்கிறார். அது செல்லாது. என் தகப்பனார் பெயரிலான உயில் தான் கடைசியானது என்பது தொடர்பாக நான் வழக்குரையை திருத்தம் செய்ய முற்படவில்லை என்றால் சரிதான்.

6) க.ச.எண்.580/1 ல் முருகப்ப கவுண்டருக்கு 0.90 ஏக்கர் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அது தவிர அவர் வாழ்ந்த வீடும் இருக்கிறது என்றால் சரிதான். கனியாம்பூண்டி கிராமத்தில் க.ச.எண்.131, 136 காலைகளில் சேர்ந்து 1.96 ஏக்கர் பூமி இருக்கிறது என்றால் சரிதான். இந்தச் சொத்துக்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அந்த சொத்துக்களுக்கும் வழக்குக்கும் தொடர்பில்லை. உயிலில் கண்ட சொத்துக்கள் அனைத்தையும் வழக்கில் சொல்லி இருக்கிறேன்.

7) திருப்பூர் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் ஆச்சியம்மாள் அ.வ.எண்.423/2018 தாக்கல் செய்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.423/2018 தற்போது வரை நிலுவையில் இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1,2 பிரதிவாதிகள் மேற்சொன்ன வழக்கு பற்றி எதிர்வழக்குரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால் சரிதான்.

8) திருப்பூர் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் மயங்காத்தாள் அ.வ.எண்.421/2018 தாக்கல் செய்து, அந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மயங்காத்தாள், நடராஜன் மற்றும் மயிலாத்தாள் ஆகியோர் க.ச.எண்.580/1 பூமியில் உள்ள நிலங்களை பொறுத்து ஒரு நாகராஜனுக்கு கிரயம் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். கிரய பத்திரத்தில் நானும் என் சகோதரி மோகனாம்பாளும் சாட்சி கையெழுத்து செய்திருக்கிறோம் என்றால் சரிதான்.

9) அந்த சொத்துக்கள் பற்றிய விவரத்தை இந்த வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சொத்துக்களின் உரிமையாளர் விவரம் சிட்டாவில் வரும் என்றால் சரிதான். கணினி சிட்டாவில் யார் பெயர் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. 1 ஏக்கர் சொத்தை 1ம் பிரதிவாதி 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு கிரயம் செய்து கொடுத்திருக்கிறார். நாகராஜை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

10) என் தகப்பனாரிடம் நாகராஜ் கிரயம் பெற்ற சொத்துக்களை சவிதா அகர்வால், பிரேம் அகர்வால், ஜெயக்குமார் அகர்வால், சுப்பிரமணி ஆகியோருக்கு கிரயம் செய்து கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். அவர்களை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஏன் கட்சி சேர்க்கவில்லை என்பது தொடர்பான குறிப்பான விவரம் எதுவும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

11) ஆச்சியம்மாள் தாக்கல் செய்த வழக்கில் மேற்சொன்ன சவிதா அகர்வால், பிரேம் அகர்வால், ஜெயக்குமார் அகர்வால், சுப்பிரமணி ஆகியோரை கட்சி சேர்த்திருக்கிறார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மயங்காத்தாள் தாக்கல் செய்த வழக்கிலும் மேற்சொன்ன சவிதா அகர்வால், பிரேம் அகர்வால்,

ஜெயக்குமார் அகர்வால், சுப்பிரமணி ஆகியோரை கட்சி சேர்த்திருக்கிறார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், க.ச.எண்.580/1 காலையிலுள்ள சொத்துக்கள் பொறுத்து தான் உயில் எழுதி வைத்திருக்கிறார் என்றாலும், அது தான் கடைசி உயில் என்றாலும் சரியல்ல.

12) இவ்வழக்கு சொத்தில் எனக்கு உரிமை எதுவும் இல்லை என்றாலும், எல்லாச் சொத்துக்களையும் வழக்கில் சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல. தனித்து தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

T.Praveenkumar
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.